# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 7 நேரம்: 2.30
சுட்டெண்: .................................

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

விலங்குகள், புலவர்களும், ஆண்டுகளுக்கு, தண்ணீர், தொண்டுகளை.

அ) டாக்டர் உ.வே.சாமிநாதையர் தமிழுக்குச் செய்திருக்கும் ..........................................த் தெரியாதவர்கள் இருக்கமுடியாது.
ஆ) கருங்காற்குறிஞ்சி பன்னிரெண்டு ..................................................... ஒரு முறைதான் மலரும்.
இ) சிகாமணியும் சுரக்குடுக்கையை எடுத்துச் சென்று ................................................ முகர்ந்து வந்தான்.
ஈ) ஔவையாரோடு வேறுசில ......................................................... வந்திருந்தார்கள்.
உ) கடந்த முந்நூறு ஆண்டுகளில் பல ...................................................... மறைந்துவிட்டன.

2) பின்வரும் வாக்கியங்களுக்கு மிகப் பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

அ) காடும் காடுசார்ந்த இடமும் (மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை) என தொல்காப்பியர் குறிப்பிட்டார்.
ஆ) தமிழ்த் தட்டச்சின் தந்தை (சுவாமி விபுலானந்தர், உ.வே.சாமிநாதையர், இ.முத்தையா, சோமசுந்தரப்புலவர்) அவர்களின் சேவைகளுக்கு தமிழுலகம் நன்றிக் கடமைப்பட்டுள்ளது.
இ) புதிய ஆத்திசூடியை (ஔவையார், வள்ளுவர், பாரதியார், சோமசுந்தரப்புலவர்) பாடினார்.
ஈ) மோசிகீரனார் களைப்பு மிகுதியினால் (மரநிழலில், தரையில், முரசுக்கட்டிலில், பஞ்சணையில்) படுத்துறங்கினார்.
உ) உழவுக்கும் தொழிலுக்கும் (நிந்தனை, ஆராதனை, வந்தனை, சிந்தனை) செய்வோம்.

3) பின்வருவனவற்றுக்கு அடைப்புக் குறிக்குள் உள்ள சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

அ) அவன், அவள், அவர்கள், அது, அவை என்னும் பெயர்ச் சொற்கள் (தன்மை, முன்னிலை, பின்னிலை, படர்க்கை)ப் பெயர்களாகும்.
ஆ) மாணவர்கள் தமிழ்மொழிப் பரீட்சை எழுதினார்கள். இவ்வாக்கியத்தின் பயனிலை (மாணவர்கள், தமிழ்மொழி, பரீட்சை, எழுதினார்கள்)
இ) காய்கறித் தன்னிறைவே நம் முன்னோர்களை வறுமைக் கொடுமையிலிருந்து காப்பாற்றியது. காய்கறி என்பது (மூவிட, கூட்டு, மாற்று, தொழிற்)ப் பெயராகும்.

ஈ) ஒரு வாக்கியத்தின் பொருள் முடிபு பெற்றதை உணர்த்துவதற்காக இடப்படும் குறியீடு (காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி) ஆகும்.

உ) மெல்லின மெய்யெழுத்துக்கள் (ய் ர் ல் வ் ழ் ள், - ங் ஞ் ண் ந் ம் ன், - க் ச் ட் த் ப் ற், - க் ங் ச் ஞ் ட் ண் த்)

ஊ) தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை (12, 18, 30, 247)

எ) ஔவையாரின் காதுகளில் அந்த நல்லவருடைய புகழ் விழுந்தது. இவ்வாக்கியம் காட்டும் காலம் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், சுற்றுலாக்காலம்)

ஏ) திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றுள் காலம் (இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து) வகைப்படும்.

ஐ) மாலாவோடு கமலா பாடசாலைக்குச் சென்றாள். இவ்வாக்கியம் மூன்றாம் வேற்றுமையில் (கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி, அடைதல்) பொருளில் வந்துள்ளது.

ஒ) மட்பானை விழுந்து உடைந்தது. மட்பானை என்ற சொற்புணர்ச்சி (தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு) விகாரப் புணர்ச்சியாகும்.

4) பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக

அ) மரியாதை ………………………………..

ஆ) கேடு ……………………………….

இ) செறிவு ……………………………….

ஈ) புறம் ……………………………….

உ) அருவம் ………………………………..

5) பின்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

அ) அக்காவின் குழந்தை என்னைக் கண்டதும் குடுகுடு என ஓடி வந்தாள். குடுகுடு என்பது (இரட்டைமொழி, அரட்டைமொழி, இணைமொழி, அடுக்குமொழி)

ஆ) Exchange என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்க்கலைச் சொல் (எண்மானம், நினைவகம், பரிமாற்றம், தகவல்)

இ) நாம் சிறந்த மனிதர்களாக (வால்தல், வாள்தல், வாழ்தல், வீழ்தல்) வேண்டும்.

ஈ) புலம், கழனி, பழனம், கமம் போன்ற பல சொற்கள் குறிக்கும் ஒரு சொல் (வானம், வயல், வனம், காடு) ஆகும்.

உ) அல்லது, ஆகவே, எனவே, என்றாலும் என்ற இச்சொற்களை (பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், இணைப்பிடைச்சொற்கள், உரிச்சொற்கள்) எனப்படும்.

6) உமக்குத் தெரிந்த திருக்குறள் 5 அல்லது புதிய ஆத்திசூடி 10 எழுதுக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

7) பின்வரும் சொற்களை இணைத்து வாக்கியங்கள் எழுதுக.

அ) ஒழுக்கம் ..............................................................................................................................

..............................................................................................................................................

ஆ) மரங்கள் ...............................................................................................................................

..............................................................................................................................................

இ) தமிழ்மொழி ..........................................................................................................................

..............................................................................................................................................

ஈ) ஓலைச்சுவடி .........................................................................................................................

..............................................................................................................................................

உ) சூரியன் ................................................................................................................................

..............................................................................................................................................

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2018 / 2019
தமிழ்மொழி

ஆண்டு: 7

பகுதி 2

முதலாவது வினாவுக்கும் மேலும் இரு வினாவுக்குமாக மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைப் பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

அ) இ.முத்தையா
ஆ) விலங்குகளைக் காப்போம்
இ) உணவு
ஈ) இயற்கைவளம்
உ) தமிழ்

2) மாணவர் ஒழுக்கம் பற்றி உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

3) காந்தியடிகள் தமது சிறை வாழ்வில் ஒவ்வொருநாளும் என்ன செய்தார் என்பதை எழுதுக.

4) உமக்கு விருப்பமான கைத்தொலைபேசி (Handy) எது என்றும் விரும்புவதற்கான காரணங்களையும் எழுதுக.

5) நீர் விரும்பும் வெளிநாட்டவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? ஏன் உமக்கு அவரை பிடித்துள்ளது என்பது பற்றி எழுதுக.

6) உமது புத்தகத்தில் உள்ள பாடல்களில் விருப்பமான பாட்டில் நான்கு அடிகள் எழுதி, அதன் கருத்தினை உமது வசன நடையில் எழுதுக.